**Tamilmanam International Research Journal of Tamil Studies**
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online) 3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p259-269** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# நாட்டுப்புறவியலும், கள ஆய்வும்

## Folklore and Fieldwork

**முனைவர் சீமான் இளையராஜா,**
உதவிப்பேராசிரியர், நாட்டுப்புறவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**Dr. Seeman Elayaraja,**
*Assistant Professor, Department of Folklore,*
*Tamil University, Thanjavur.*
*Email: elayarajas1@gmail.com Tel: +91 9976914892*

***Article history***
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: **04-09-2026**

*Corresponding Author
Email:
*elayarajas1@gmail.com*

**Abstract:**
Fieldwork refers to the location chosen by a researcher for their study and the collection of data from that site. Such fieldwork is conducted across disciplines like science, history, folklore, and social sciences. Among these, fieldwork holds a prominent position in the field of folklore.
Here, fieldwork is undertaken to collect folklore genres such as songs, ballads, oral tales, proverbs, riddles, folk deities, worship traditions, festivals, beliefs, rituals, traditional medical practices, performing arts, handicrafts, and the usage of material culture objects.
In literary/textual research, primary source texts already serve as data, so fieldwork presents no challenge there. However, for a researcher who chooses a topic related to folklore, the place where people live serves as the primary source of data. The purpose of this paper is to highlight how folklore-based fieldwork is conducted.

**Keywords:** *science, history, folklore, social sciences, Fieldwork.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

## ஆய்வுச்சுருக்கம்

கள ஆய்வு என்பது ஓர் ஆய்வாளர் தனது ஆய்விற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடத்தையும் அந்த இடத்திலிருந்து தரவுகள் சேகரிப்பதையும் குறிப்பதாகும். இக்கள ஆய்வு அறிவியல், வரலாறு, நாட்டுப்புறவியல் மற்றும் சமூக அறிவியல் சார்ந்த துறைகளில் நடைபெற்று வருகின்றன. இவற்றில் நாட்டுப்புறவியல் துறையில் கள ஆய்வு முக்கிய இடம்பெறுகின்றது. இங்கு நாட்டுப்புற இலக்கியங்களாகிய பாடல்கள், கதைப்பாடல்கள். வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புறத் தெய்வங்கள், வழிபாட்டு மரபுகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள், சடங்குகள், மரபுவழி மருத்துவ முறைகள், நிகழ்த்துக்கலைகள், கைவினைத் தொழில் கலைகள், புழங்கு பொருள்களின் பயன்பாடு போன்றவற்றைச் சேகரிப்பதற்காகவும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏட்டிலக்கிய ஆய்வுகளில் மூல நூல்கள் ஏற்கெனவே தரவுகளாக இருப்பதால் அங்கே கள ஆய்வுப் பற்றிய சிக்கல் இல்லை. ஆனால் நாட்டுப்புறவியல் தொடர்பான ஆய்வுத் தலைப்பை தேர்ந்தெடுத்துச் செய்யும் ஓர் ஆய்வாளருக்கு மக்கள் வாழும் இடமே தரவுகளின் ஆதாரம் ஆகும். நாட்டுப்புறவியல் சார்ந்த கள ஆய்வுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள், திருவிழாக்கள், பாடல்கள், கதைப்பாடல்கள். வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள் கலைகள், நிகழ்த்துக்கலைகள், கைவினைத் தொழில் கலைகள், புழங்கு பொருள்களின் பயன்பாடுகள், விளையாட்டுகள், ஆகியவற்றை விரிவாக விளக்கும் உண்மையான காலக்கண்ணாடியாக நாட்டுப்புற இலக்கியங்கள் திகழ்கின்றன. நாட்டுப்புற இலக்கியம் கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமின்றி அவர்களது உணர்வுகளையும், பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கின்றது. இதில் கள ஆய்வு முக்கிய இடம்பெறுகின்றது.

## ஆய்வுக்களம்

ஆய்வுக்களம் என்பது ஆய்வாளர் தனது ஆய்விற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட நிலவியல் பகுதியாகும். இந்தப் பகுதி ஓர் ஊராகவோ, ஒரு வட்டமாகவோ, ஒரு மாவட்டமாகவோ, ஒரு

| Copyright © Author(s)

மாநிலமாகவோ இருக்கலாம். இந்த ஆய்வுக்களத்தில் கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர் சிறுமியர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், நடுத்தர வயதுடைய ஆண் மற்றும் பெண்கள், வயதானவர்கள், வயது முதிர்ந்தவர்கள் உள்ளிட்ட பலரையும் சந்தித்து ஆய்வுக்கான அனைத்து தரவுகளையும் அவர்களிடம் இருந்து சேகரிக்கலாம்.

இக்களத்தில் வாழும் மக்கள் நாட்டுப்புற வழக்காறுகளைப் பின்பற்றி நம் உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருப்பர். இம் மக்களுக்கென்று வரலாற்று நிலை, பொருளாதார நிலை, பண்பாட்டு நிலை என அனைத்தும் இருக்கும். ஒட்டு மொத்தமாக நோக்கினால் மரபு வழிப் பண்புகளை ஏற்றுக் கொண்டு மக்கள் வாழும் ஓர் இடமே ஆய்வுக்களமாகும்.

## ஆய்வுக்களத்தைத் தேர்ந்தெடுத்தல்

ஆய்வுக்களத்தை ஆய்வாளர்கள் தான் வசித்து வாழ்ந்த ஒரு மைய இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வதே நல்லதாகும். ஏனெனில் தரவுகள் சேகரிக்கும் போது மொழிப் புரிதல் மிக அவசியமானதாகும். பழகிய இடத்து மக்கள் என்றால் களப்பணியின் போது அச்சம், தயக்கம் ஏற்படாது. முன் பின் அறிமுகமில்லாத முற்றிலும் புதிய களத்தைத் தேர்ந்தெடுப்பவர்கள் களப் பணியைத் தொடங்கும் முன் களத்தில் நிகழும் விழாக்கள், பொது நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்துகொண்டு மக்களின் வாழ்வியல் முறைகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

ஆய்வுக்களத்தைத் தேர்ந்தெடுத்தவுடன் களத்தை மையமிட்டு வந்துள்ள நூல்கள், இதர ஆவணங்கள் அனைத்தையும் தேடிக் கண்டுபிடித்துப் படித்து விடுவது நல்லது. வெவ்வேறு மதங்கள், வெவ்வேறு சாதிகள், வெவ்வேறு மொழிகள் பேசப்படும் இந்நாட்டில் ஊர்களின் அமைப்பு முறைகள் குறித்தும் ஊர் செயல்பாடுகள் குறித்தும் முன்கூட்டியே பயணங்கள் மேற்கொண்டு தெரிந்து கொள்வது களப் பணிக்குப் பயனுள்ளதாக அமையும்.


ஆய்வாளர் தனது சொந்தப் பண்பாடு சார்ந்த தலைப்பை எடுத்துக் கொள்வதே சரியானதாக அமையும். ஒரு மதத்தார். ஒரு சாதியார், ஒரு வட்டாரத்தார் என வகைமைப்படுத்தி யாரிடம் தரவுகள் சேகரித்தாலும் அது பொதுமைச் சிந்தனைக்கே வழிவகுக்கும். அதனால் தலைப்பு ஆய்வுக்களத்தையொட்டி எந்த முறையிலும் எடுத்துக்கொள்ளலாம்.

## கள ஆய்வு ஊர்களைத் தேர்ந்தெடுத்தல்

ஆய்வுக்களம் என்பது மிகவும் பரந்துபட்ட இடமாகும். இதில் ஆய்வாளர் அனைத்து ஊர்களுக்கும்

சென்று வாய்மொழிக்கதைகள், கதைப் பாடல்கள், வழிபாட்டு மரபுகள், சடங்குகள் போன்ற தரவுகளைத் திரட்டுவது மிகவும் கடினமானதாகும். இதனால் சோர்வடைந்து களப்பணி தோல்வியடைந்துவிடக் கூட வாய்ப்புண்டு. அதனால் களத்தின் மையப்பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்கிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று களப்பணி மேற்கொள்ளலாம். இத்தகைய சேகரிப்பின் மூலம் ஆய்வுக் களமாகிய முழுத்தொகுப்பில் குறிப்பிட்ட ஊர்களை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு தரவுகள் திரட்டி களத்தில் வாழும் மக்களின் தன்மைகளையும் மன நிலைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு மாவட்டத்தில் ஓர் ஒன்றியத்திற்கு இரண்டு ஊர்கள் வீதம் தேர்ந்தெடுத்து அந்த இரண்டு ஊர்களுக்கும் குறைந்தது மூன்று கிலோ மீட்டர்வரை இடைவெளி இருப்பதாக வரையறுத்துக் கொண்டு தரவுகள் சேகரிக்கலாம். களப்பணி ஊர்கள் முற்றிலும் கிராமமாக இருக்குமாறு தேர்ந்தெடுக்கவேண்டும். தரவுகள் பெறப்பட்டதும் அந்தந்தத் தகவலாளியிடமும் தரவுகள் தொடர்பானப் பேட்டியும் எடுக்கவேண்டும். எடுக்கப்பட்ட தரவுகளில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமாயின் இரண்டாவது கட்டமாகக் களப்பணிக்கு மீண்டும் சென்று வரலாம். களப்பணி ஊர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஏதேனும் ஒரு பொது நியாயத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுப்பது இன்றியமையாததாகும்.




*படம் 1: நாட்டுப்புறவியல் கள ஆய்வு மேற்கொள்ளப்படும் நிலைகள் — (1) ஆய்வுக்களம் தேர்ந்தெடுத்தல், (2) ஊர்கள் தேர்ந்தெடுத்தல், (3) தகவலாளிகளைத் தேர்ந்தெடுத்தல், (4) கள ஆய்விற்குத் தயாராகுதல், (5) களப்பணி மேற்கொள்ளல், (6) தரவு ஆவணப்படுத்தல்.*

## களப்பணி

பொதுவாகக் களப்பணியை மழை, இடி, மின்னல், இல்லாத கோடை காலங்களில் வைத்துக்கொள்வதே சிறப்பானதாகும். சில தலைப்புக்களுக்குத் தரவுகள் குளிர் காலத்தில்தான் கிடைக்கும் என்றால் அந்தக் காலத்தில் வைத்துக்கொள்வதில் தவறேதும் கிடையாது. கோடைகாலம் என்பது நோய்நொடி குறைந்த காலம். உழைப்பாளிகளுக்கு ஓய்வான காலம். ஆகவே பகல்நேரம் தவிர்த்து இரவு நேரங்களில் நடைபெறும் ஊர் விழாக்களில் நெடுநேரம் நின்று ஆய்வாளர் தரவுகள் திரட்டலாம்.

கள ஆய்வை முதலில் தொடங்கும்போது எதிர்மறைச் சூழல்கள் தோன்றலாம். அதற்காக ஆய்வாளர் பயந்துவிடக் கூடாது. ஒலிப்பதிவு நாடாவில் தரவுகளைப் பதிவு செய்யும்போது இடையிடையே ஒலிப்பதிவுக் கருவியின் செயல்பாட்டைக் கண்காணிப்பது அவசியமாகும். ஒரு கிராமத்தில் ஓரிடத்திலிருந்து தகவல் சேகரிக்கும் போது ஊர்மக்கள் கூடிவிடுவார்கள். அதைப் பார்த்து அச்சமடைந்து விடக் கூடாது. ஒரு தகவலாளியை ஓரிடத்தில் வைத்து நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், சடங்குமுறைகள் போன்றவற்றை சேகரிக்கும் போது அவர் எவ்வளவு கதைகள், பாடல்கள் சொல்ல விரும்புகின்றாரோ அனைத்தையும் சொல்லச் சொல்லி அவற்றைப் பதிவுசெய்து விடுவதுதான் நல்லது. ஓர் ஊரில் ஒரு தகவலாளியிடம் தரவுகள் சேகரித்தால் பிற தகவலாளிகள் இயல்பாக வந்து தரவுகள் கொடுக்கத் தயாராவார்கள். தரவுகளைப் பதிவு செய்தவுடன் தகவலாளி தொடர்பான அனைத்து விபரங்களையும் கேட்டுப் பதிவு செய்து கொள்வது அல்லது எழுதிவிடுவது நல்லது. இது களப்பணியில் மிகவும் தேவையான ஒன்றாகும்.

## தகவலாளிகளைத் தேர்ந்தெடுத்தல்

களப்பணி ஆய்வில் நாட்டுப்புற இலக்கியங்கள், கலைகள், கைவினைக் கலைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், புழங்கு பொருட்கள் போன்ற சாதி, மத ஆய்வுகளில் அனைத்துச் சாதி மற்றும் அனைத்து பிரிவினரிடமிருந்தும் தகவல்கள் சேகரிப்பது அவசியமாகும். குறிப்பாகப் பிற்பட்ட பிரிவுகளில் இனக்குழு அடையாளம் கொண்ட சாதியினர், மிகவும் பிற்பட்ட சாதியினர் ஆதி திராவிடர் ஆகிய பிரிவுகளில் தரவுகள் சேகரிப்பது மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில் இந்தச் சாதியினரில் பெரும்பகுதி பாரம்பரியத் தரவுகளைத் தன்னகத்தே கொண்டவர்களாக இருப்பர்.

களஆய்வு என்பது மேற்கண்ட அனைத்தையும் உள்ளடக்கியதாகும். அதனால், அவர்களிடமிருந்து

| Copyright © Author(s)

தரவுகள் திரட்டி ஆய்வு செய்யப்பட்ட வேண்டும். ஓர் ஆய்வில் தகவலாளிகளாக இளம் வயதினர், நடுத்தர வயதினர், வயதானவர்கள், முதியவர்கள் என்று தேர்வுசெய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட வேண்டும். அப்போதுதான் அதன் உண்மையை ஓர் ஆய்வாளன் அறிந்து கொள்ளமுடியும்.

## கள ஆய்விற்குத் தயாராகுதல்

களப்பணியைத் தொடங்கும் முன் ஆய்வாளர் நாட்டுப்புறவியல் புலம் சார்ந்த பொதுவான அறிவினைப் பெறுவதற்குரிய நூல்களைப் படித்துவிட வேண்டும். மேலும் ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த நூல்களைப் பயின்று ஆய்வாளர் தன்னைச் செழுமைப் படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் களத்தில் தேவையான தரவுகளைச் சரியாக எடுக்க முடியும். இதுவரை வீட்டிற்கும் தாம் கற்ற கல்வி நிறுவனங்களுக்கும் சென்று வந்த ஆய்வாளர் ஒரு புதிய மக்கள் சமுதாயத்தைச் சந்தித்துத் தரவுகளைச் சேகரிக்க தயாராகின்றார். பரந்துபட்ட களத்தில் தனது கள ஆய்வைச் செய்ய செல்கின்றார். அதனால் அவர் திறந்த மனத்துடன் வெளிப்படையாகச் செயல்பட்டுத் தரவுகள் சேகரிப்பது மிக அவசியமான ஒன்றாகும். முதலில் களப்பகுதி மக்களைத் தனக்கு மேலானவர்கள் என்பதை தன் மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து மனிதநேயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். மக்களைச் சந்திக்கும்போது தனது ஆய்வுபற்றி முதலில் விரிவாகச் சொல்லிவிட வேண்டும். ஆண், பெண் என்ற எந்தப் பாகுபாடுமில்லாமல் நடுநிலையுடன் பேசுவதும் செயல்படுவதும் எல்லையற்ற தரவுகளைப் பெற வழிவகுக்கும். களத்தில் தான் சந்திக்கும் தகவலாளி என்பவர் ஓர் இணையாசிரியர் என்பதை மறந்துவிடக் கூடாது. களப்பணியைத் தொடங்கும் முன் தரவுகளைத் திரட்டுவதற்குரிய கருவிகளை பழுது ஏதுமில்லாமல் தயார் செய்யவேண்டும்.

## நாட்டுப்புறவியலும், ஆய்வுப் போக்கும்

பாமர மக்களின் பட்டறிவும் அது பற்றிய கல்வியும் பின்னாளில் நாட்டுப்புறவியலானது. மொழி ஆய்வின் எல்லைகள் அகலப்பட அகலப்பட அது பற்றிய ஆய்வுப் பரப்பும் அகலப்பட்டன. எனவே நாட்டுப்புறவியல் என்பது பாமர மக்களையும் அவர் சார்ந்த வாழ்க்கை முறைகளையும் மையமாகக் கொண்டது. உலகியல் பண்புகளை ஆய்வுக்குட்படுத்தப்படும் போக்கு இங்குப் பேரளவில் மேற்கொள்ளப்பட்டது. எனவே, இவ்வகை ஆய்வு மக்கள் ஆய்வு எனப்பட்டது. தொகுப்புப் பணியில் தொடங்கிய இவ்வகை ஆய்வுகள் பகுத்துக்கூறல், வகுத்துச் சொல்லல். விளக்கிக் காட்டல், எனத் தொடர்ந்து ஒப்பாய்வு நிலைகளில் தன்னை நிறுத்திக் கொண்டுள்ளது.

| Copyright © Author(s)


## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

பாட்டு - கதை கதைப்பாட்டு விடுகதை - பழமொழி என்பன கிராமத்து மக்களின் இலக்கிய விளையாட்டுக்களாக இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவற்றுள் கதைப்பாட்டு என்பது கதை, அம்மானை, கதைப்பாடல், கதை பொதி பாடல் என்று பொதுவாக மக்களால் அறியப்பட்டுவருகிறது. கதைப்பாடல்கள் பொதுவாக, புராண, இதிகாச, சரித்திர, சமூகம் சார்ந்தவையாக அமைவன. ஒரு கதையை ஓசை கூட்டிப் பாடும் முறையில் அமைப்பது கதைப்பாட்டாகக் கருதப்படுகிறது.

நாட்டுப்புறத் தெய்வங்கள், அவற்றின் வழிபாட்டு மரபுகள் குறித்த கள ஆய்வில் தெய்வங்களின் இருப்பிடங்களை, கோயில் வடிவங்களைப் புகைப்படம் எடுத்துக் கொள்வதே சரியானதாகும். ஏனெனில் ஆய்வேட்டின் பின்னிணைப்பில் புகைப்படங்கள் இடம்பெறும்போது ஆய்வேட்டின் நம்பகத் தன்மையை வலுவுள்ளதாக இருக்கும். தெருக்கூத்து, உடுக்கடிப் பாடல் சேகரிப்பு, கரகாட்டம், தேவராட்டம், சலங்கையாட்டம் போன்ற நிகழ்கலைகளைப் பற்றிய ஆய்வில் காணொளி (video) மூலம் தகவல் சேகரிப்பது அனைத்து நிலையிலும் சரியானதாக இருக்கும். இது துல்லியமான ஆய்வேட்டை உருவாக்கப் பெரிதும் பயன்படும். இத்தகைய சேகரிப்பில் தொழிற்நுட்பம் தெரிந்த உதவியாளர்களை வைத்துக்கொள்வதே எல்லா நிலையிலும் களப்பணி வெற்றிபெற வழிவகுக்கும்.

## களப்பணி முறைகள்

களப்பணியில் தரவுகள் திரட்டுவதில் உற்றுநோக்கல் இன்றியமையாத பங்காற்றுகின்றன. இவை பெரும்பாலும் சமுதாயவியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புறவியல் என்பது மக்களுடன் நேரடியாக அய்க்கியப் பட்டுப்போன ஒரு பல்துறைச் சார்ந்த சமுதாய நலம் நாடிய புலமாக இருப்பதால் இதில் இவை மூன்றையும் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கலாம்.



*படம் 2: களப்பணியில் பயன்படுத்தப்படும் மூன்று முதன்மை தரவு சேகரிப்பு முறைகள் — உற்றுநோக்கல், பேட்டி எடுத்தல், வினா நிரல்.*

### உற்றுநோக்கல்

களப்பணி ஆய்வில் ஒலிப்பதிவுக்கருவி, நிழற்படக் கருவி ஆகியவை பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்படுவது மரபாக மாறிவிட்டது. இப்படியொரு சூழலில் நுட்பமான தரவுகளைச் சேகரிக்க உற்றுநோக்கல் பயன்படுகின்றது. களத்தில் நிகழும் ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட்ட நோக்கத்துடன் நோக்குவது உற்றுநோக்கலாகும். இதன்மூலம் தகவலாளி கூறும் தரவுகளைத் தவிர்த்து அத்தரவுகள் சொல்லும் போது நிகழும் உடலசைவுகள், முகப்பாவனைகள், உள்ளார்ந்த உணர்வுகள் போன்றவற்றையும் தெரிந்துகொள்ளலாம். இதன் மூலம் ஆய்விற்குரிய அகப்புற நிலைகளை அறிந்து ஆய்வேட்டை அமைக்க வழி ஏற்படும். களத்தில் ஒரு தகவலாளி பாடலைப் பாடும்போது ஒலிப்பதிவைத் தவிர்த்து பிறநிலைகளில் அவருடைய அங்க அசைவுகள், பாடல் பற்றிய அவரது கருத்து நிலைகள். முகப்பாவனைகளில் வெளிப்படும் நிலைகள் போன்றவற்றை உற்று நோக்கி தரவுகளைச் சேகரிப்பது உற்று நோக்கலாகும். இதில் ஆய்வாளர் பாடகர் பாடும்போது அவரிடம் இணையாமல் வெளியிலிருந்து தகவல்களைச் சேகரிக்கின்றார்.

தெருக்கூத்து, கணியான்கூத்து போன்ற கலைகளை ஆய்வுசெய்யும் ஆய்வாளர் கூத்துக்கலைஞர்களில் தானும் ஒரு வேடத்தை ஏற்றுக் கலைஞராக மாறி தரவுகளைச் சேகரிப்பது இதன் மூலம் ஆய்வாளர் கூத்துக் கலைஞர்களிடமிருந்து கூடுதலான அல்லது முழுமையான

தரவுகளைப் பெறமுடிகின்றது. இப்படி உற்று நோக்கல் என்பது கள ஆய்வில் நுட்பமான முழுமையான தரவுகள் கிடைப்பதற்குரிய வழி வகை செய்கிறது.

### வினா நிரல்

களப்பணியில் பரந்துபட்ட மக்களிடமிருந்து தரவுகளைத் திரட்டுவதற்குப் பெரிதும் பயன்படும் முறைகளில் வினா நிரல் இன்றியமையாமை பெறுகின்றது. இம்முறையில் தொகுக்கப்படும் தரவுகள் தரம் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஆய்வாளர் எடுத்துக்கொண்ட தலைப்பிற்கிணங்க வினா நிரலை அமைத்து ஊர் ஊராகச் சென்று தகவலாளிகளிடம் வினாக்கள் கேட்டு அதற்குப் பதில் எழுதிக்கொள்வது ஒரு முறையாகும். வினா நிரலை அமைத்து வினா நிரலுடன் சுயமுகவரியிட்ட அஞ்சல்வில்லையை ஒட்டிய உறை ஒன்றையும் சேர்த்து வைத்து களத் தகவலாளிகளுக்கு அனுப்பி பதிலை (தரவை) பெறுவது மற்றொரு முறையாகும். வினா நிரல் களப்பகுதி மக்கள் பேச்சு வழக்கை ஒட்டி அமைவது அவசியமானதாகும். நாட்டுப்புறவியலில் ஒரு சாதி /குழு நடை முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை இத்தரவுகள் மூலம் பின்பற்றலாம். இவ்வாய்விற்கு வினாநிரல் மிகவும் தேவையான ஒன்றாகும்.

### ஒளிப்படக் கருவி


ஒளிப்படக் கருவியைப் பற்றிய தொழிற் நுட்ப அறிவினைப் பெற்றிருப்பது நல்லது. தேவைப்பட்டால் களப்பணியின் போது ஓர் உதவியாளரை வைத்துக்கொண்டு தேவையான புகைப்படங்கள் எடுக்கலாம். புகைப்படங்களை ஆய்வேட்டின் கடைசி பக்கங்களில் வைக்கலாம். இதன் வழி ஆய்வின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தலாம். இதற்கு ஒளிப்படக்கருவி மிகவும் பயன்படும்.

### பேட்டி எடுத்தல்

ஆய்வாளர் தகவலாளியை நேரில் சந்தித்து ஆய்வுத் தலைப்பு தொடர்பான வினாக்களை எழுப்பி விடை / தரவுகளைப் பெறுவது பேட்டியாகும். ஆய்வாளரும் தகவலாளியும் நேருக்கு நேர் உரையாடுவதால் ஆய்வுத் தலைப்பு தொடர்பான அனைத்துச் செய்திகளையும் வெளிக்கொண்டுவருவதற்குப் பேட்டி பெரிதும் உதவி புரிகின்றது. வயது முதிர்ந்த ஒரு தகவலாளியிடம் மணிக்கணக்கில் பேட்டி அமையும்போது ஒரு பாரம்பரிய சமுதாய வழக்காறு சார்ந்த வரலாற்றை வெளிக்கொண்டு வந்துவிடும் சக்தி பேட்டிக்கு உண்டு. இந்தப் பேட்டிகளை கட்டமைப்புடைய பேட்டி, கட்டமைப்பில்லாப் பேட்டி என வகைப்படுத்துவர். தகவலாளிக்கு

முன்கூட்டியே வினாக்களை அனுப்பிவிட்டு ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று வினாக்களுக்குப் பதிலளிப்பது கட்டமைப்புடைய பேட்டியாகும். இந்த வகைப் பேட்டியில் ஆய்வாளர் அனுப்பிய வினாக்களுக்கு மட்டுமே விடைகளைப் பெற்றுக்கொண்டு செல்வார். பிறவகையான வினாக்கள் ஏதுமிருக்காது. கட்டமைப்பில்லாப் பேட்டியில் ஆய்வாளர் முன்கூட்டிய வினாத் தயாரிப்பு ஏதுமின்றி தகவலாளியைச் சந்தித்து ஆய்வுத் தலைப்பைக் கூறிவிட்டு வினாக்களைக் கட்டுப்பாடு ஏதுமில்லாமல் கேட்டு விடைகளையும் தரவுகளையும் பெறுவார். ஆய்வாளர் இந்த இருவகைப் பேட்டிகளையும் சூழலைப் பொருத்து நடத்தலாம்.

தெருக்கூத்து, கணியான்கூத்து போன்ற கூத்துக் கலைஞர்கள், கரகாட்டம். தேவராட்டம் போன்ற பல்வேறு ஆட்டக் கலைஞர்கள், அண்ணாவிகள், வழிபாட்டிடங்களில் முக்கிய இடம்பெறும் பூசாரிகள், ஊர்ப் பெரியவர்கள். கைவினைப் பொருள் உற்பத்தி செய்யும் கலைஞர்கள் போன்றவர்களிடம் பேட்டியின் மூலம் தகவல்கள் சேகரிக்கலாம். நாட்டுப்புறவியல் ஆய்விற்கு இது மிகவும் பயனுள்ளதாகும்.



*படம் 3: ஒரு களப்பணி நிகழ்வு — ஆய்வாளர் மூத்த தகவலாளியிடம் ஒலிப்பதிவுக் கருவியுடன் பேட்டி காணும் காட்சி.*

## முடிவுரை

நாட்டுப்புற இலக்கியங்களாகிய பாடல்கள், கதைப்பாடல்கள். வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப்புறத் தெய்வங்கள், வழிபாட்டு மரபுகள், திருவிழாக்கள், நம்பிக்கைகள், சடங்குகள், மரபுவழி மருத்துவ முறைகள், நிகழ்த்துக் கலைகள், கைவினைத்

| Copyright © Author(s)

**Article DOI: https://doi.org/10.63300/tm12042026.20**

தொழில் கலைகள், புழங்கு பொருள்களின் பயன்பாடு போன்றவற்றைச் சேகரிப்பதற்காகவும், ஆவணப்படுத்துவதற்கும் நாட்டுப்புறவியல் துறையில் கள ஆய்வு முக்கிய இடம் பெறுகின்றது.

## பயன்பட்ட நூல்கள்

[1.] இராமநாதன், ஆறு, 2003, நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள், தென்னிந்திய மொழிகள் நாட்டுப்புறவியல் கழகம், திருவனந்தபுரம்.

[2.] கிருட்டிணசாமி, க, நாட்டுப்புற இலக்கியம் — ஓர் ஆய்வு, சீதைப்பதிப்பகம், சென்னை.

[3.] சந்திரசேகரன், இரா, 2003, நாட்டுப்புறவியல் கள ஆய்வு, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

[4.] சற்குணவதி, 2004, தமிழக நாட்டுப்புறவியல், மணிவாசகர் நூலகம், சென்னை.

[5.] சரஸ்வதி வேணுகோபால், 2021, நாட்டுப்புறவியலும் மக்கள் வாழ்வியலும், மாணிவாசகர் பதிப்பகம், சென்னை.

[6.] தமிழண்ணல், 2021, ஆய்வியல் அறிமுகம், செல்லப்பா பதிப்பகம், மதுரை.

[7.] பஞ்சாங்கம், க, 2017, ஆய்வு நெறிமுறைகள், அன்னம் அகரம் வெளியீட்டகம், தஞ்சாவூர்.

[8.] நாகலிங்கம், ஆ, 2023, புதுவை நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், செல்வி பதிப்பகம், திருமகள் நகர், வேல்ராம்பட்டு, புதுச்சேரி.

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*